*4*

# "இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன!"

*மனிதர்கள் உலகத்தின் வரைபடங்களை வரையத்தொடங்கியபோது, பூமியின் அதிகமான பகுதி கண்டுபிடிக்கப்படாமலேயே இருந்தது. இந்தத் தொடக்ககால வரைபட வரைவாளர்களுக்கு, அறியப்படாத பகுதிகள் என்பவை தடைசெய்யப்பட்டவைகளாக, அபாயமானவைகளாக, அச்சுறுத்தும் புராணக் கதைகளின் உயிரினங்களால் நிறைந்ததாகவும் இருந்தன. பழக்கமற்ற பகுதியை ஒரு அம்புக்குறியினால் சுட்டிக்காண்பித்து, "இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன!"[1] என்ற குறிப்பைக் கொண்டுள்ள பழங்கால வரைபடத்தின் சித்திரம் ஒன்றைக் கண்டதை நான் நினைவுகூருகின்றேன்.*

*வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது பலருக்கு, அறியப்படாத எல்லைப் பகுதியாக உள்ளது, மற்றும் இது, முதன்முதலில் நில வரைபடத்தை வரைந்தவர்கள் கொண்டிருந்த அதே பயத்தையும் மனத்தடுமாற்றத்தையும் கொண்டு அவர்களால் கண்ணோக்கப்படுகிறது. இன்றைய நாட்களில் மனத்துணிவற்ற கண்டுபிடிப்பாளர்கள் "இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன!" என்று உண்மையுடன் கூறக்கூட முடியும், ஏனெனில் வெளிப்படுத்தின விசேஷத்தின் இருதயம் போன்ற மையப்பகுதியில் நாம், "ஏழு தலைகளையும், பத்துக் கொம்புகளையும், தன் தலைகளின்மேல் ஏழு முடிகளையுமுடைய சிவப்பான பெரிய வலுசர்ப்பமிருந்தது'' என்று வாசிக்கின்றோம் (12:3). இந்த வலுசர்ப்பத்துடன் கூடுதலாக, இந்தப் புத்தகத்தின் மேற்பரப்பில் இன்னும் மற்ற வினோதமான, இயற்கைக்கு மாறான உயிரினங்களும் அலைந்து திரிகின்றன: சிறகுகளுள்ளவைகளும், முன்புறத்திலும் பின்புறத்திலும் கண்களால் நிறைந்தவைகளுமாயிருந்தன (4:6-8); தேள்களின் வால்களுக்கு ஒப்பான வால்களையும் உடையவைகளாயிருந்த வெட்டுகிளிகள் (9:3-11); ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும் கொண்டு இருந்த மிருகம் (13:1, 2); தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் (16:13, 14)! இந்த வினோதமான உயிரினங்கள் - மற்றும் இந்தப் புத்தகத்தில் உள்ள அச்சமூட்டும் பிற உயிரினங்கள் ஆகியவை - வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் காட்சியை, பயம் நிறைந்த பயணிக்குத் தீயகுறிகாண்பித்து அச்சமூட்டுவதாக்கக் கூடும்.*

*இந்த மற்றும் இதற்கு அடுத்த பாடங்கள், பழக்கமற்ற இந்த உருவகத்தைப் பற்றி நீங்கள் அதிகம் உகந்ததாய் உணர உதவுதல் என்பதை*

நோக்கமாகக் கொண்டுள்ளன. நாம் அடையாளங்களைப் பொதுவாகவும், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் அடையாளங்களைக் குறிப்பாகவும் கண்ணோக்குவோம்.

## அடையாளங்கள் என்பவை யாவை?

"அடையாளம்" என்பது ("symbol"), *sun*[2] ("with"அதாவது, "உடன்") மற்றும் *ballo* ("to throw" அதாவது "எறிதல்") என்ற வார்த்தைகளை இணைத்துப் பெறப்பட்ட கிரேக்கக் கூட்டு வார்த்தையாக உள்ளது. "அடையாளம்" என்பது ("symbol") "உடன் எறியப்பட்ட ஒன்று" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது. "அடையாளம்" என்ற வார்த்தை இரண்டு கருத்துக்களைக் குறிப்பிடுகிறது - ஒன்று வடிவம் உடையதாகவும் இன்னொன்று வடிவமற்றதாகவும் உள்ளது - இது ஒரு கருத்தை வெளிப்படுத்துவதற்காக "ஒன்றாய் கூட்டி எறியப்படுகிறது."[3] அகராதியானது அடையாளம் என்ற வார்த்தையை, "something that represents something else by association, resemblance, or convention, especially a material object used to represent something invisible"[4] ("ஏதாவது ஒரு விஷயமானது இன்னொரு விஷயத்தை, இணைவு, ஒத்துக்காட்டுதல் அல்லது இயல்புவழக்கு ஆகியவற்றினால் குறிப்பிடுதல், விசேஷமாக காணப்படாத ஒன்றைக் குறிப்பதற்கு ஒரு பொருள் பயன்படுத்தப்படுகிறது") என்று வரையறுக்கிறது.

மக்கள் முறையான அடிப்படையில்/அன்றாடம் வாழ்க்கையில் அடையாளங்களைக் கையாளுகின்றனர். ஒரு பாட்டிலின் மேற்பகுதியில் ஒரு மண்டை ஓடு மற்றும் குறுக்காக வைக்கப்பட்ட இரு எலும்புகள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு படத்தை நாம் காணும்போது, அந்த பாட்டிலில் விஷம் உள்ளது என்று நாம் அறிகின்றோம் - எனவே பிள்ளைகள் அதைத் தொட இயலாத இடத்தில் நாம் வைத்துவிடுகின்றோம். மண்டை ஓடும் குறுக்காக வைக்கப்பட்ட எலும்புகளும் விஷத்தின் சித்தரிப்பாக இருப்பதில்லை; மாறாக அவைகள் விஷத்தின் ஒரு அடையாளமாக இருக்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாட்டில் பத்திரிகைகளின் தலைப்புக் கேலிச்சித்திரங்கள் அடிக்கடி, ஒரு யானையையும் ஒரு கழுதையையும் சித்தரிக்கின்றன.[5] யானை என்பது குடியரசுக் கட்சியையும், கழுதை என்பது ஜனநாயகக் கட்சியையும் குறிக்கின்றன. (இவ்விடத்தில் தமிழகத்தில் தற்போது பெரும்பான்மையாக உள்ள இரண்டு கட்சிகளைக் குறிக்கும் சின்னங்களான இரட்டை இலை மற்றும் உதய சூரியன் ஆகியவற்றை நாம் குறிப்பிடலாம்.)

வெளிப்படுத்தின விசேஷமானது வாழ்வின் ஒவ்வொரு வட்டாரத்திலிருந்தும் தரவழைக்கப்பட்ட அடையாளங்களை ஏராளமாகக் கொண்டுள்ளது. நாம் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தைப் புரிந்துகொள்ள விரும்பினால், இவைகள் "இணைவு அல்லது ஒத்திருக்கும் தன்மை என்பதைக் கொண்டு வேறொரு விஷயத்தைக் குறிக்கின்றன" என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். காணப்படாத சத்தியத்தைக்

குறிப்பதற்குக் காணக் கூடிய பொருட்கள் பயன்படுத்தப்படும்.

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் உள்ள எல்லா விஷயங்களும் அடையாளத்துவமாய் இருப்பதில்லை. 1:4 வசனமானது யோவானைக் குறிப்பிடுகையில், இது யோவான் என்ற பெயர்கொண்ட ஒரு உண்மையான மனிதரைக் குறிக்கிறதே தவிர, "காண இயலாத கருத்து" ஒன்றைக் குறிப்பதில்லை. தேவன், கிறிஸ்து, மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோரைப் பற்றிய குறிப்புகள் (1:1, 4, 5) தேவத்துவத்தில் உள்ள நபர்களைப் பற்றிப் பேசுகின்றனவே தவிர, அவைகள் நாம் கண்டுபிடிக்க வேண்டிய மறைவான சத்தியங்களைப் பற்றிப் பேசுவதில்லை. எனவே, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது உருவகம் மற்றும் நேரடியான மொழி ஆகியவற்றின் கலவையாக உள்ளது. இது ஒரு இறைவெளிப்பாட்டு இலக்கியமாக இருப்பதால், உருவக மொழிநடை என்பது இந்தப் புத்தகத்தில் மேலாக ஆளுமை செய்கிறதாக உள்ளது.

## அடையாளங்கள் எதனை அர்த்தப்படுத்துகின்றன என்பதை நாம் எவ்வாறு அறிய முடியும்?

வெளிப்படுத்தின விசேஷத்தின் முதல் வாசகர்கள், ''இறை வெளிப்பாட்டு இலக்கியத்தை மதித்து இப்படிப்பட்ட புத்தகத்தை ஒருவர் வாசிக்கும்போது பின்பற்ற வேண்டிய உள்ளான விதிகள் சிலவற்றைப் புரிந்துகொண்டிருந்தனர்.''[6] அந்த ''விதிகளைப்'' பற்றிய ஒரு சில சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்வதற்கு என்னை அனுமதியுங்கள்:

கடைப்பிடிக்கப்பட வேண்டிய மிக முக்கியமான கொள்கை என்பது அனேகமாகப் பின்வருவதாக இருக்கலாம்: *வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது தனது செய்தியை அடையாளங்கள் மூலமாக வெளிப்படுத்து கிறது என்பதைப் புரிந்துகொண்டு அதற்கேற்றபடி இந்தப் புத்தகத்திற்கு விளக்கம் அளியுங்கள்.* இது, வெளிப்படுத்தின விசேஷத்தில் நாம் வாசிப் பவற்றில் பெரும்பான்மையானவை அடையாளத்துவமாக இருப்பதால், "நாம் இதை அணுகும்போது விளக்கம் அளிப்பதன் வழக்கமான விதியைத் திருப்பிப்போட வேண்டும்" என்று அர்த்தப்படுகிறது.[7]

> வழக்கமாக, வேதவசனத்தின் எந்த ஒரு பகுதியில் உள்ள வார்த்தை களும், அவற்றை உருவகமாக எடுத்துக் கொள்வதற்கான காரணம் எதுவும் இருந்தால் தவிர, அவைகள் அவற்றின் தெளிவான மற்றும் இயல்பான கருத்திலேயே புரிந்துகொள்ளப்பட வேண்டும்.[8] முன் அனு மானம் என்பது எப்போதுமே நேரடியான அர்த்தத்திற்குச் சாதகமாகவே உள்ளது; ஒருவர் வேறொரு விதமாக இதை எடுத்துக் கொண்டால், அவர் அதற்கான காரணத்தைக் காண்பிக்க வேண்டும். வெளிப்படுத்தின விசேஷத்தில் இது விஷயமாக இருப்பதில்லை. சித்தரிப்பு வடிவத்தில் முன்நிறுத்தப்பட்டுள்ள இந்தப் புத்தகத்தில், அடையாளங்கள் நேரடி அர்த்தத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதற்கு நல்ல காரணம் இருந்தால் தவிர, அவைகள் உருவகமாகவே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று ஒருவர்

*யூகித்தறிய வேண்டும்.*[9]

*நான் ஒரு சிறுபையனாக இருந்தபோது, "வசனப்பகுதியானது அது கூறுவதை அர்த்தப்படுத்துகிறது மற்றும் அது அர்த்தப்படுத்துவதைத்தான் கூறுகிறது'' என்ற விளக்கம் ஒன்று பயன்படுத்தப்பட்டது. அந்தத் தத்துவமானது நேரடியான மொழிநடைக்கு நன்கு செயல்படுகிறது. வேதாகமத்தின் பெரும்பான்மையான பகுதி நேரடியான மொழிநடையில் எழுதப்பட்டுள்ளது - ஆனால் அது உருவக மொழிநடைக்குப் பொருந்து வதில்லை. அடையாள மொழி நடை என்பது "அது கூறுவதை அர்த்தப் படுத்துவதில்லை மற்றும் அது அர்த்தப்படுத்துவதைக் கூறுவதில்லை."*

*''அடையாளங்கள் உருவக நடையில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்பதை நாம் புரிந்து கொள்ளும்போது, உருவக அர்த்தத்தைக் கண்டுபிடித்தல் என்ற அறைகூவலுக்கு நாம் தயாராகின்றோம். அதை நாம் எவ்வாறு செய்யக்கூடும்? அவ்வப்போது, வசனப்பகுதியே அடையாளங் களை விளக்கப்படுத்துவதன்மூலம் நமக்கு உதவிசெய்கிறது.*[10] *எடுத்துக் காட்டாக, அதிகாரம் 1ன் ஏழு குத்துவிளக்குகள் ஆசியாவில் இருந்த ஏழு சபைகளைக் குறிக்கிறது (1:12, 20) மற்றும் பொன்னால் ஆன தூபக்கலசங்கள் என்பவை பரிசுத்தவான்களின் ஜெபங்களைக் குறிக்கிறது (5:8) என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது.*

*சிலவேளைகளில் சந்தர்ப்பப் பொருள் உதவிசெய்கிறது. உதாரணமாக, அதிகாரம் 1ல், வசனம் 4ல் உள்ள "ஏழு ஆவிகள்" என்பது பரிசுத்த ஆவியான வரைக் குறிக்கிறது என்று சந்தர்ப்பப் பொருள் நமக்குக் கூறுகிறது.*[11]

*மீண்டுமாக, சிலவேளைகளில் நமக்கு, இறைவெளிப்பாட்டு இலக்கியங் களில் பயன்படுத்தப்பட்டுள்ள குறிப்பிட்ட சில அடையாளங்களின் வகைமுறை அறிவுபற்றிப் பொதுவாக உதவியளிக்கப்படுகிறது. எடுத்துக் காட்டாக, இப்படிப்பட்ட இலக்கியத்தில் கொம்பு என்பது அதிகாரத்தைச் சுட்டிக்காட்டுகிறது.*

*வரலாற்றுப் பின்னணியில் நன்கு பழக்கமாகிக் கொள்ளுதல் என்பது நாம் உதவிபெறக்கூடிய மிகமுக்கியமான வழியாக உள்ளது. வெளிப்படுத் தின விசேஷமானது, "சமகாலத்திய நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளில் திட்டவட்டமாக வேரூன்றியுள்ளது, அவற்றுடன் இசைவான வகையில் இது விளக்கம் அளிக்கப்பட வேண்டும்" என்று வில்லியம் ஹென்ரிக்ஸென் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.*[12] *அடுத்த பாடத்தில் நான், வரலாற்றுப் பின்னணி பற்றிய உங்கள் படிப்பை முடுக்கி விடுவதற்கு, ரோமப்பேரரசின் வரலாறு பற்றிய ஒரு சுருக்கமான மதிப்பாய்வைக் கொடுப்பேன்.*

*பழைய ஏற்பாட்டை அறிதல் என்பது நாம் உதவிபெறக்கூடிய மிக முக்கியமான வழிகளில் ஒன்றாக உள்ளது. வெளிப்படுத்தின விசேஷத்தில் பழைய ஏற்பாடு பற்றி நானூறுக்கும் அதிகமான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. அடுத்த பாடத்தில் நான், பழைய ஏற்பாட்டுக் குறிப்புகள் பலவற்றைப் பட்டியலிட்டு, அவைகள் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் காணப்படுகிற இடங்களையும் குறிப்பிடுவேன்.*

*விளக்கம் அளிப்பதற்கான தொடக்க இடத்தை நாம் பெற்ற உடனே,*

வசனத்திற்கு முறையாக விளக்கம் அளித்தலின் (வேதாகம விளக்கம் அளித்தலின்) அடிப்படைக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். உருவக மொழிநடையைப் பொறுத்தமட்டில், நாம் இரண்டு அடிப்படைக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும். முதலாவது, *உருவகத்தை அது குறிப்பிடும் விஷயத்துடன் இசைவித்தல்.* இது உருவகத்தின் பண்புகளையும், அதில் குறிப்பிடப்படுகிற நபர் அல்லது விஷயத்தின் பண்புகளைக் கண்ணோக்குவதாலும் பின்பு அவைகளின் ஒற்றுமைத் தன்மைகளைக் கவனிப்பதாலும் செய்யப்படுகிறது. எடுத்துக்காட்டாக, லூக்கா 13:32ல், இயேசு ஏரோதுவை ஒரு நரி என்று கூறினார். நரியின் பண்புகள் ஏரோதின் பண்புகளுடன் ஒப்பிடப்படும்போது, இயேசு ஏரோதின் வஞ்சகத்தையும் கள்ளத்தனத்தையும் குறிப்பிட்டார் என்பது தெளிவாகக் கானப்படுகிறது. அதுபோலவே, வெளிப்படுத்தின விசேஷம் 1ல், உள்ளூர் சபைக்குழுமங்கள் குத்துவிளக்குகள் என்று அழைக்கப்படுகின்றன. அந்த நாட்களில் குத்துவிளக்குகளின் நோக்கங்களையும், இருளான உலகத்தில் வெளிச்சங்களாய் இருக்கும்படிக்குக் கிறிஸ்தவர்களுக்கு விடுக்கப்பட்ட அறைகூவலையும் (மத்தேயு 5:14; பிலிப்பியர் 2:14-16) ஆழ்ந்து சிந்திக்கும் போது, அர்த்தம் தெளிவாகக் காணப்படுகிறது: சபையானது சத்தியத்தின் வெளிச்சத்தை உயர்த்திப் பிடிக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது.[13]

*உருவகத்தை மிகவும் அதிகமாக வலியுறுத்துவதைத் தவிர்த்தல்* என்பது உருவக மொழிநடையைப் பொறுத்தமட்டில் இரண்டாவது அடிப்படைக் கொள்கையாக உள்ளது. யாரோ ஒருவர், “பாலுண்ணியின் தனிச்சிறப்பைக் கண்ணோக்க வேண்டாம்'' என்று கூறியுள்ளார். ஒரு உருவகமானது பொதுவாக ஒரே ஒரு கருத்தை விளக்குவதற்காகவே பயன்படுத்தப்பட்டது; சட்டப்படி, ஒரு உருவகத்தின் ஒவ்வொரு விபரத்தையும் நாம் வலியுறுத்தினால் அந்த உருவகத்திற்கு நாம் அநீதி இழைக்கிறோம். எடுத்துக்காட்டாக, தேவனுடைய மக்கள் ஆடுகள் என்று அழைக்கப் படுகின்றனர் (யோவான் 10:16), ஆனால் இது, கிறிஸ்தவர்கள் கம்பளிமயிறால் போர்த்தப்பட்டு புல்லைத் தின்னுகின்றனர் என்று அர்த்தப்படுவதில்லை. இந்தப் பொது அறிவுக்கொள்கையானது வெளிப்படுத்தின விசேஷத்தைப் பொறுத்தமட்டில் சிறப்பாகத் தேவைப்படுகிறது. ரே சம்மர்ஸ் அவர்கள், “பல விபரங்கள் நாடகத்துவமான செயல் விளைவுக்கானவைகளாய் இருக்கின்றன, அவை வசனப்பகுதியின் மிகச்சிறிய அர்த்தங்களைக் கூட்டுவதற்கானவைகளாய் இருப்பதில்லை. ஒரு தரிசனத்தின் விபரங்கள் தனிச்சிறப்புடையவைகளாய் இருக்கலாம், ஆனால் பெரும்பாலான விஷயங்களில் அவைகள் காட்சியை இட்டு நிரப்புவதற்காக மட்டுமே பயன்படுத்தப் படுகின்றன” என்று வலியுறுத்தினார்.[14]

நாம் ஒரு இணைவைத் தரவழைப்போம்: நீங்கள் ஒரு அணிவகுப்பைப் பார்வையிடுவதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். காட்சி வண்டி யொன்று (float)[15] வேகமாக நகர்ந்து செல்லுகிறது. அது மலர்களால் மூடப்பட்டு, “வளர்ச்சியின் ஆவி” என்று பெயரிடப்பட்டுள்ளது. நீங்கள் அதில் உள்ள ஒவ்வொரு ரோஜா, ஒவ்வொரு மல்லிகை மற்றும் ஒவ்வொரு

சம்பங்கி மலர் ஆகியவற்றின் அர்த்தத்தைக் கேட்பீர்களா - அல்லது அதற்கு மாறாக ஒவ்வொரு மலரும் ''வளர்ச்சியின் ஆவி'' என்ற முற்றான ஆய்வுப்பொருளுக்குப் பங்களிக்கின்றதை மட்டுமே செய்கின்றன என்று காண்பீர்களா? அதுபோலவே, நாம் வெளிப்படுத்தின விசேஷத்தைப் படிக்கையில், விபரங்களில் அதிகமாய் ஈடுபாடு கொள்ளாமல், முற்றான செய்தியை மாத்திரம் கண்ணோக்குபவர்களாய் இருக்க வேண்டும்.

நாம் ஒவ்வொரு தரிசனத்தையும் படிக்கையில், நீங்கள் மூன்று படிநிலைகளினூடே செல்லுதல் அவசியமாய் இருக்கிறது: (1) "பெரிய சித்தரிப்பு" என்ற அடிப்படைச் செய்தியைக் கண்ணோக்குங்கள்; (2) விபரங்கள் அந்தச் செய்திக்கு ஏதேனும் அர்த்தத்தைக் கூட்டுவதாக இருக்கின்றனவா என்று பார்ப்பதற்கு அவற்றை நோக்கி நகருங்கள்; (3) பின்பு மீண்டும் "பெரிய சித்தரிப்பை" கண்ணோக்குவதற்குப் பின்னாகத் திரும்புங்கள், இல்லையென்றால் நீங்கள் அதைப் பற்றிய கண்ணோட்டத்தை இழப்பீர்கள்.[16]

வெளிப்படுத்தின விசேஷத்தின் படிப்பிற்கு, உருவக மொழிநடையின் வசனத்தை முறையாக விளக்கப்படுத்துதலின் விசேஷித்த விதிகளுடன் கூடுதலாக, அதன் பொதுவான கொள்கைகளும் நடைமுறைப் படுத்தப் படுகின்றன.[17] இங்கு நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள விரும்பக்கூடிய சில கொள்கைகள் தரப்படுகின்றன:

*பிரதான உபதேசம் ஒன்றை தெளிவற்ற வேதவசனப்பகுதியின் அடிப் படையில் ஒருபோதும் அமைக்காதீர்கள்.* வெளிப்படுத்தின விசேஷத்தில் அடையாளத்துவ வசனப்பகுதியை அடிப்படையாகக் கொண்ட எந்த ஒரு போதனையும் ஐயப்பட வேண்டியதாக உள்ளது. இந்தக் கொள்கையை மீறுதலுக்கான உதாரணமாக, இயேசு எருசலேமில் உண்மையிலேயே நேரடி அர்த்தமாக ஆயிரம் ஆண்டுகள் ஆட்சிசெய்வார் என்ற கோட்பாடு உள்ளது.

*ஒரு உருவக நடையானது (வேதாகமத்தின்) வேறொரு இடத்தில் உள்ள தெளிவான போதனைக்கு முரண்படும் வகையில் ஒருபோதும் விளக்கப் படுத்தாதீர்கள்.* இந்தக் கொள்கையை மீறுகிற போதனைக்கு, யெகோவா சாட்சிக்காரர்களால் போதிக்கப்படுகிறதான 144,000 பேர் மாத்திரமே பரலோகம் செல்வார்கள், எஞ்சிய விசுவாசிகள் மீளக்கட்டுவிக்கப்பட விருக்கும் பூமியில் வாழ்வார்கள் என்ற கருத்து உதாரணமாக உள்ளது. இது, விசுவாசிகள் யாவரும் பரலோகம் செல்லுவார்கள் என்று போதிக்கிற 1 பேதுரு 1:3-5 மற்றும் பிறவசனப்பகுதிகள் ஆகியவற்றை மீறுகிறது. உருவக மொழி நடை என்பது இலக்கிய மொழிக்கு அழகைக் கூட்ட முடியும், ஆனால் அது மாறுபட்டவகையில் போதிப்பதாயிருக்க முடியாது. புதிய ஏற்பாட்டின் மற்ற பகுதிகளில் காணப்படாத எந்த போதனையும் வெளிப்படுத்தின விசேஷத்தில் காணப்படுவதில்லை. இவ்விதமாக, வெளிப்படுத்தின விசேஷத்தின் போதனை யாவையும் புதிய ஏற்பாட்டின் மற்ற இடங்களில் காணப்படுகிற தெளிவான போதனைக்கு இசைவுள்ளதாகவே இருக்க வேண்டும்.

வெளிப்படுத்தின விசேஷத்தைப் படிப்பதற்கு இன்னும் ஒரு பொதுவான கொள்கை, குறிப்பான தனிச்சிறப்பைக் கொண்டுள்ளது: *உரையின் உருவகங்களினுடைய அர்த்தம் மாறுபட முடியும் என்பதைப்*

*புரிந்துகொள்ளுங்கள். ஒரு அடையாளமானது ஒரு காட்சியமைவில் கொண்டுள்ள அர்த்தம் இன்னொரு காட்சியமைவில் அது கொண்டுள்ள அர்த்தத்தில் இருந்து மாறுபடமுடியும். எடுத்துக்காட்டாக, மக்கள், ஆடுகள் என்று கூறப்பட்டபோது (ஏசாயா 53:6; 1 பேதுரு 2:25), ஏவுதல் பெற்ற எழுத்தாளர்கள், ஆடுகளில் உள்ள குறைவாக விரும்பத்தக்க பண்புகளையே பொதுவாகச் சிந்தையில் கொண்டிருந்தனர். இதற்கு மறுபுறத்தில், இயேசு ஒரு ஆட்டுடன் ஒப்பிடப்பட்டபோது (ஏசாயா 53:7; நடபடிகள் 8:32; யோவான் 1:29; வெளிப்படுத்தின விசேஷம் 5:6ஐயும் காணவும்), எழுத்தாளர்கள், ஆடுகளில் உள்ள மிகவும் அதிகமாக விரும்பத்தக்க பண்புகளைச் சிந்தையில் கொண்டிருந்தனர்.*

*விளக்கம் அளித்தலின் சில முறைமைகள், ஒரு அடையாளமானது புத்தகத்தின் எவ்விடத்தில் காணப்பட்டாலும் மற்றும் அதன் சந்தர்ப்பப் பொருள் எதுவாக இருந்தாலும், அது எப்போதும் ஒரே அர்த்தத்தைக் கொண்டுள்ளது என்ற யூகத்தின் அடிப்படையில் அமைந்துள்ளன; ஆனால் இது ஒரு தவறான யூகமாக உள்ளது. நாம் அடுத்த பாடத்தில் காணப் போகின்றபடி, பழைய ஏற்பாட்டுக் குறிப்புகளை அதற்குரிய வெளிப் படுத்தின விசேஷத்தின் பிரதிக் குறிப்புகளுடன் ஒப்பிடும்போது, நாம் “மாற்றுக்கருத்தமைவுகளை” கண்ணோக்க வேண்டும் - இது அர்த்தத்திலும் ஒரு “மாற்றுக் கருத்தமைவு” உள்ளது என்று சுட்டிக்காண்பிக்கிற ஒரு மாறுபாடாக உள்ளது. நாம் வசனப்பகுதியைப் படிக்கையில், சில வேளைகளில் ஒரேவிதமான அடையாளங்கள், ஒரு ஒப்பீட்டை அல்லது ஒரு நேர்மாறைத் தரவழைக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காண்போம். இதற்கு, அதிகாரம் 1ல் உள்ள ஏழு விளக்குத்தண்டுகள் (சபைகள்) மற்றும் அதிகாரம் 4ல் உள்ள விளக்குத்தண்டுகள் (பரிசுத்த ஆவியானவர்) என்பது ஒரு உதாரணமாக உள்ளது. அதிகாரம் 12 மற்றும் 17ல் உள்ள இரண்டு பெண்கள் (பரிசுத்தமான ஒருத்தி மற்றும் வேசியான இன்னொருத்தி) என்பது இன்னொரு உதாரணமாக உள்ளது.*

*விளக்கம் அளித்தலுக்கான மற்ற கொள்கைகளும் குறிப்பிடப்பட முடியும், ஆனால் இப்போதைக்கு இவைகள் போதுமானவைகளாய் உள்ளன. சிலவேளைகளில் தரப்படுகிற எல்லா ஆலோசனைகளும் சிறிதளவே உதவிகரமாய் இருக்கும் என்பதை நாம் அறியவேண்டும். அவ்வப்போது நாம், ஒரு குறிப்பிட்ட அடையாளத்தின் அர்த்தத்தை அறிவதில்லை என்பதை மாத்திரம் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கும். இப்படிப்பட்ட இடங்களில், ஹியூகோ மெக்கார்டு அவர்கள் நமக்கு, “மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்” என்று நினைவூட்டுகின்றார் (உபாகமம் 29:29), அதாவது, நாம் தேவனுடைய வசனத்திற்கு அப்பால் செல்வதை அல்லது அதனுடன் ஒன்றைக் கூட்டுவதைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் (1 கொரிந்தியர் 4:6; வெளிப்படுத்தின விசேஷம் 22:18, 19), மற்றும் (தனிப்பட்ட) கருத்துக்கள் என்பவை தேவனுடைய மக்களுக்குள் உள்ள இசைவைக் கெடுப்பதை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது (நீதிமொழிகள் 6:19; ரோமர் 14:19, 22; எபிரேயர் 13:1).*[18]

## அடையாளங்களின் மாறுபட்ட சில வகைகள் யாவை?

வெளிப்படுத்தின விசேஷத்தில் பலவகையான அடையாளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன, ஆனால் நான்கு வகைகள் அதிகம் மேம்பட்டிருக்கின்றன: (1) அடையாளத்துவமாகப் பயன்படுத்தப்பட்டுள்ள எண்கள், (2) பழைய ஏற்பாட்டில் இருந்து அடையாளத்துவம், (3) வரலாற்றுப் பின்னணியின் அடிப்படையில் அமைந்த அடையாளங்கள், மற்றும் (4) வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்திற்கே உரிய அடையாளங்கள். அடையாளங்கள் எப்படிப் புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்பதை விவரிப்பதற்கு, இவற்றில் முதல் வகையைப் பற்றி நாம் இந்தப் பாடத்தில் படிப்போம். அடுத்த பாடத்தில் நாம், மற்ற மூன்றையும் பரிசீலனை செய்வோம்.

எண்களின் பயன்பாடு என்பது வெளிப்படுத்தின விசேஷத்தில், அனேகமாக மிகவும் குறிப்பிடத்தக்க அடையாளத்துவமாய் உள்ளது. ரே சம்மர்ஸ் அவர்கள் பின்வரும் விளக்கம் கொடுத்துள்ளார்:

> மொழி என்பது தொண்மை நிலையில் இருந்த, சொற்தொகுப்பு மிகவும் குறைவாய் இருந்த அந்தத் தொடக்க நாட்களில், ஒரு எபிரெயச் சொல்லானது பல எண்ணிக்கையுள்ள பல்வகை அர்த்தங்களுக்கான கடமையைச் செய்யும்படி சிலவேளைகளில் நிர்ப்பந்திக்கப்பட்டது. அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் மனிதர்கள், வார்த்தைகளை நாம் பயன்படுத்துவதுபோல் எண்களைப் பயன்படுத்த இயல்பாகவே வந்தனர். இவைகள் ஒழுக்கரீதியான அல்லது ஆவிக்குரிய சத்தியத்தின் அடையாளங்களாய் இருந்தன. ஒரு குறிப்பிட்ட எண் என்பது திட்டவட்டமான கருத்து ஒன்றை ஆலோசனையாகத் தெரிவிக்கும் ... . இப்படிப்பட்ட எண்கள் ... இவற்றை நாம் கணக்கியல் சூத்திரங்களை விளக்கப் பயன்படுத்தும்போது கொண்டுள்ள நேரடி அர்த்தமான மிகச்சரியான தன்மையுடன் வாசிக்கப்பட முடியாது.[19]

(எண் என்பதை எவ்வாறு அடையாளத்துவத் தனிக்குறிப்பாக எடுத்துக் கொள்ள முடியும் என்பதற்கு ஒரு விவரிப்பாக, சிலர் "பதிமூன்று" என்ற எண்ணை எப்படி துரதிர்ஷ்டமானது என்று நினைக்கின்றனர் என்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள்.[20])

நீங்கள் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் முழுவதையும் ஆராய்ந்து அதில் உள்ள எண்களைச் சிவப்பு மையினால் குறித்து வைத்தால், அந்தப் பக்கங்கள் யாவும் சின்னம்மையால் தாக்கப்பட்டதுபோல் காணப்படும். [Here in English the sentence is read, "the pages would look like they had a bad case of measles[21]"] வெளிப்படுத்தின விசேஷத்தை நான் போதிக்கின்ற போது, இந்தப் புத்தகத்தில் காணப்படுகிற வேறுபட்ட எண்கள் பற்றிய பட்டியல் ஒன்றை (மாணவர்களிடத்தில்) கையளிப்பதுண்டு. இதைப் பார்க்கும் மாணவர்கள் வழக்கமாகக் குழப்பத்தில் மூழ்கிவிடுவார்கள். பின்பு நான், பெரும்பாலான எண் அடையாளங்கள் "மூன்று," "நான்கு," மற்றும் "பத்து" என்ற மூன்றே மூன்று எண்களில் இருந்தே தரவழைக்கப்பட்டுள்ளன என்று

சுட்டிக்காண்பிப்பதன்மூலம் அவர்களின் குழப்பங்கள் சிலவற்றை நீக்குவதற்குத் துரிதப்படுவேன்.

"மூன்று" என்பது தெய்வீகத்திற்குரிய எண் என்று பலரால் கருதப் படுகிறது. இது தந்தை, தாய் மற்றும் பிள்ளை ஆகியோருக்கிடையில் உள்ள அன்பு என்ற கருத்தாக உள்ளது என்று சிலர் யூகித்துள்ளனர். ஒருவேளை இது "திரித்துவம்"[22] என்ற கருத்தின் தொடக்ககால ஒளிக்கீற்றாகவும் இருக்கலாம்; அதாவது, பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர். ஹோமர் ஹெய்லி அவர்கள், "மூன்று என்ற எண்ணானது வேதவசனம் முழுவதிலும் பயன்படுத்தப்பட்டுள்ள வகையை ஆழ்ந்து சிந்தித்தால், இது முழுமை மற்றும் முறையான முழுமை என்பதன் அடையாளமாக இருந்துள்ளதாகத் தோன்றுகிறது" என்று கூறினார்.[23]

"நான்கு" என்பது இரண்டாவது முக்கிய எண்ணாக உள்ளது, இது "வானவியல் எண்"[24] - அதாவது, படைப்பின் எண் - என்று நினைக்கப் பட்டது. இது ஒருவேளை, வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு என்ற நான்கு திசைகளின் காரணத்தினால் இவ்வாறு நினைக்கப் பட்டிருக்கலாம். வெளிப்படுத்தின விசேஷத்தில் "நான்கு" என்பது பெரும்பாலும் மனிதகுலம் முழுவதையும் குறிப்பிடுகிறது.

"பத்து" என்ற எண்ணுக்குக் கடந்து செல்வதற்கு முன்பு, "ஏழு" (மூன்று கூட்டல் நான்கு[25]) என்பதில் தொடங்கி, மூன்று மற்றும் நான்கு ஆகிய எண்களின் இணைவுகளைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திப்போம். வெளிப்படுத்தின விசேஷத்தைச் சாதாரணமாக வாசிப்பவர்கூட, அதில் "ஏழு" என்ற எண் அடிக்கடி பயன்படுத்தப் பட்டிருத்தலினால் தாக்கம் அடைவார்; இந்த எண்ணானது இந்தப்புத்தகத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட முறைகள் காணப்படுகிறது.[26] "எபிரெயர்களுக்கு மிகவும் பரிசுத்தமான எண்ணான"[27] "ஏழு" என்பது பூரணத்துவத்தைக் குறிக்கிறது. (தெய்வீகத் துவமும் அண்டமும் இணைந்தால் அது நிலவுகின்ற யாவற்றுக்கும் சமமாய் உள்ளது.)

"பன்னிரண்டு" (மூன்று பெருக்கல் நான்கு) என்பது வேதவசனங்களில் பயன்படுத்தப்படுகிற இன்னொரு இணைவாக உள்ளது: இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்கள், பன்னிரு அப்போஸ்தலர்கள் மற்றும் இன்னும் பிற. "பன்னிரண்டு" மற்றும் பன்னிரண்டின் பெருக்கங்கள் ("144" போன்றவை) வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் அடிக்கடி காணப்படுகின்றன. பன்னிரண்டு என்ற எண்ணும்கூட தெய்வீகத்தையும் படைப்பையும் (நிலவுகிற எல்லாவற்றையும்) இணைவிப்பதாக உள்ளதால், இது முழுமை யான தன்மை என்ற கருத்தைக் கொண்டுள்ளது. இது எபிரெயச் சிந்தனையில் பொதுவாக மார்க்கரீதியான முழுமைத் தன்மையுடன் உறவுபடுத்தப்பட்டது.

இப்பொழுது நாம் வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள "பத்து" என்ற மூன்றாவது திறவுகோல் எண்ணுக்குத் தயாராக இருக்கின்றோம். "பத்து" என்ற எண்ணும்கூட முழுமைத் தன்மையை, பூரணத்துவத்தை அல்லது அதிகாரத்தை - இது அனேகமாக, ஒரு நபருக்குப் பத்து விரல்கள்[28] உள்ளன என்ற உண்மையில் இருந்து கிளைத்திருக்கலாம் - குறிப்பிடுவதாக இருந்தது.

*"பத்து" என்பது மனித குலத்துடன் நெருங்கிய தொடர்புடைய எண்ணாக இருந்ததால், இந்த எண்ணானது மனிதத்துவத்தில் முழுமைத் தன்மையை விசேஷமாகக் கொண்டிருந்தது. "பத்தைப்" (100 அல்லது 1000 என்றாக்கு வதற்கு),[29] பத்தால் பெருக்கும்போது, அது இன்னமும் பெரிய தனிச்சிறப்பை எடுத்துக் கொண்டிருந்தது. "ஐந்து" என்ற எண்ணும் (பத்தில் பாதி) "பத்துடன்" தொடர்புடையதாக இருந்தது. ஒரே ஒரு கையில் உள்ள விரல்கள் ஐந்து என்பதால், "ஐந்து" என்பது வரம்புக்கு உட்பட்ட பலம் அல்லது காலவேளையை மறைமுகமாய் உணர்த்திற்று.*

*கூடுதலாக, அடிப்படை எண் - "ஒன்று" - ஒன்றும் குறிப்பிடப்பட வேண்டும். "ஒன்று" என்ற எண், ஒருமைத்தன்மை என்ற கருத்தைக் கொண் டிருக்கக்கூடும் (17:13ஐக் காணவும்); ஆனால் வெளிப்படுத்தின விசேஷத் தில், இது "ஒரு மணிநேரம்" என்ற சொற்றொடரில் பிரதானமாகப் பயன்படுத்தப்படுகிறது, இது ஏதோ ஒன்று தனித்து நிற்பதையும் இவ்விதமாக, அது ஒப்பீட்டளவில் பலவீனமாக உள்ளதையும் சுட்டிக்காண் பிக்கிறது. ("ஒரு மணிநேரம்" என்பது விரைவில் கடந்து செல்லக்கூடிய, சார்புநிலையில் குறுகிய கால வேளையைச் சுட்டிக்காண்பிக்கிறது.) ஒன்றை இரண்டாக்குவதற்காக இரட்டித்தல் என்பது நமது படிப்பில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. "இரண்டு" என்பது பலப்படுத்துதலின் எண்ணாக உள்ளது (பிரசங்கி 4:9-11; உபாகமம் 17:6; 19:15; லூக்கா 10:1 ஆகியவற்றைக் காணவும்). நாம் இரண்டு சாட்சிகளைப் பற்றி (11:3) வாசிப்போம், மற்றும் இரண்டு என்ற எண்ணால் பெருக்கப்படுவதால் பலம் பெறும் மற்ற எண்களையும் காண்போம்.*

*வெளிப்படுத்தின விசேஷத்தில் எஞ்சியுள்ளவற்றில் பெரும்பான்மை யான எண்கள், ஏற்கனவே கலந்துரையாடப்பட்ட எண்களின் இணைவு களாக மாத்திரமே உள்ளன. முழுமையான பட்டியலை உங்களுக்கு நான் கொடுப்பதற்கு முன்பு, மிகமுக்கியமான - "ஏழு" என்ற - எண்ணுக்கு நாம் திரும்பி, இந்த எண்ணில் இருந்து வருகிற வழி அலகுகளைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பது அவசியமாக உள்ளது.[30] எடுத்துக்காட்டாக, நாம் "ஆறு" என்ற எண்ணைக் கண்ணோக்குவோம். ஆறு என்பது ஏழுக்கு ஒன்று குறைவான எண்ணாக உள்ளது; "ஏழு" என்பது பூரணத்துவத்தைக் குறிப்பிடுவதால், "ஆறு" என்பது பூரணத்துவம் இன்மையை அல்லது துன்மார்க்கத்தைக் குறிக்கிறது.[31] ஆறு என்பது ஏறக்குறைய ஏழு என்பதாக உள்ளதால், "ஆறு" என்பது வஞ்சனையையும் மறைமுகமாய் உணர்த்துகிறது. கடைசியில், "ஆறு" என்ற எண் பேரழிவை முன்னுரைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. 13:18ன் புகழ்ச்சியற்ற "666" என்ற எண்ணுக்கு நாம் வரும்போது இதை சிந்தையில் வைத்துக் கொள்ளுங்கள்.*

*ஏழில் இருந்து பெறப்படும் வழி அலகு எண்ணான "$3^1/_2$" (ஏழில் பாதி) என்பது வெளிப்படுத்தின விசேஷத்தில் மிகவும் ஆர்வத்திற்குரிய எண்ணாக உள்ளது. "ஏழு" என்பது பூரணத்துவத்தின் அடையாளமாக நிற்பதால், "$3^1/_2$" என்பது பூரணத்துவம் இன்மையைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. நாம் காணப்போகின்ற படி, வெளிப்படுத்தின விசேஷத்தில் இந்த எண்ணானது பொதுவாக, சோதிக்கப்படுதல், கடினமான வேளைகள் மற்றும் பரீட்சிக்கப்படுதல்*

ஆகியவற்றுடன் (மேன்மையான நாள் முன்வருகிறது என்பதை மறைமுகமாய் உணர்த்துதல்) இணைவு கொண்டுள்ளது. “$3^1/_2$” என்பதை விளக்கப்படுத்துவதற்குப் பலவழிமுறைகள் வெளிப்படுத்தின விசேஷத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, “42 மாதங்கள்” மற்றும் “1,260 நாட்கள்” என்பவை “$3^1/_2$” ஆண்டுகள் என்பதைக் கூறுவதற்கான மாற்று வழிகளாக உள்ளன. குறிப்பாக, “ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும்” என்பது மனதை ஈர்க்கிற சொற்றொடராக உள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் 12ல், “ஆயிரத்திருநூற்றறுபதுநாளளவும்” (வசனம் 6) என்பது “ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமுமாக” (வசனம் 14) என்பதுடன் ஒன்றுக்குப் பதில் ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.[32] “ஒரு காலம், காலங்கள், அரைக்காலம்” என்பது “$3^1/_2$” ஆண்டுகள் என்பதைக் கூறுவதற்கான இன்னொரு வழியாகவே உள்ளது.

அடுத்த பக்கத்தில், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் பயன் படுத்தப்பட்டுள்ள பெரும்பாலான எண்களின் பட்டியல் ஒன்றை நீங்கள் காண்பீர்கள்.[33] இந்த எண்கள் எவ்வாறு, ஒன்று, மூன்று, நான்கு மற்றும்/ அல்லது பத்து என்ற எண்களுடன் உறவுபடுகின்றன என்பதை நெருக்க மாகக் கவனியுங்கள். நீங்கள் வெளிப்படுத்தின விசேஷத்தில் உங்கள் வாசித்தலைச் செய்யும்போது, இந்தப் பட்டியலை உங்களால் காணக்கூடிய இடத்தில் ஒட்டி வைக்க விரும்பலாம்.

இந்த முழு எண்களுடன் கூடுதலாக, சில பின்னம் எண்களும் (சிறு பகுதி) வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளன. பொதுவாக, “பகுதியான ஆனால் முழுமையாயிராத” என்பதே இவற்றின் அர்த்தமாக உள்ளது ($^1/_{10}$ = ஒரு சிறு பாகம், $^1/_4$ = ஒரு சில, $^1/_3$ = சற்றே பெரிதான பகுதி[34]). எல்லாமும் இல்லையென்றாலும், இந்தப் பின்னம் (சிறு பகுதி) எண்களில் பெரும்பாலானவை தேவனுடைய நியாயத்தீர்ப்பு பற்றியவையாக உள்ளன. இந்தப் பின்னம் (சிறு பகுதி) எண்கள் “பகுதிச் செலுத்துகையை”ப் பற்றிப் பேசுவதற்காக (இதில் “எஞ்சியது பிற்பாடு வரும்” என்ற கருத்து மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது) வெளிப்படுத்தின விசேஷத்தில் பயன்படுத்தப் படுகின்றன என்று ஜிம் மெக்குகன் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்.[35]

இந்தப் பாடத்தை நான் முடிப்பதற்கு முன்னர், வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள எண்களை விளக்கப்படுத்துதல் குறித்து இரண்டு எச்சரிக்கைகளை வெளியிடுவது அவசியமாக உள்ளது:

(1) உங்கள் கற்பனையைத் தறிகெட்டு ஓட அனுமதிக்காதீர்கள். புரூஸ் மெட்ஸ்ஜெர் அவர்கள், “வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது நமது கற்பனைக்கு அடிப்படையில் பிரியமாக இருப்பதில் தனிச்சிறந்ததாக உள்ளது - இருப்பினும், அது சுயமாய் இயங்குகிற, ஆனால் ஒழுங்கமைக்கப் பட்ட கற்பனையாக இருக்க வேண்டும்” என்று எச்சரிக்கை செய்துள்ளார்.[36] இங்கு கருத்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ள அடையாளத்துவ அர்த்தங்கள், பழைய ஏற்பாட்டிலும் யூதத்துவத்தின் மற்ற எழுத்துக்களிலும் - விசேஷமாக இறைவெளிப்பாட்டு இலக்கியங்களிலும் - இந்த எண்களின் பயன்பாடு

பற்றிய பரிசீலனையின் விளைவாக உள்ளன. இந்தக் கருத்துக்கள் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்திற்காகக் கண்டுபிடிக்கப்படவில்லை; இவைகள், யாரோ ஒருவர் இந்தப்புத்தகத்திற்கான தமது சுயவிளக்கத்தைத் திணிக்க விரும்பி, அவரது கட்டுக்கு அடங்காத கற்பனையில் விளைந்தவை அல்ல.

(2) இறைவெளிப்பாட்டு இலக்கியத்தில் எண்களை அடையாளத்துவ மாகப் பயன்படுத்துதல் பற்றிப் புரிந்து கொள்ளுதல் என்பது மறைவான எண் சாஸ்திரத்தைப் போன்றதாக இருப்பதில்லை,[37] இந்த எண் சாஸ் திரமானது "எண்களின் மறைவான அர்த்தங்கள் மற்றும் அவைகள் மனித வாழ்வில் கொண்டுள்ளதாக யூகிக்கப்படும் செல்வாக்கு ஆகியவற்றைப் பற்றிய படிப்பாக உள்ளது."[38] J. B. செகல் அவர்கள், "எகிப்தின் மகா பிரமிடுக்கான கணக்கீடுகள் போல், வேதாகமத்தின் புள்ளியியல் விபரங்கள் அரைப் பைத்தியங்களுக்கும் கிறுக்கர்களுக்கும் - ஞானம் உள்ள மனிதர்களுக்கும்கூட, அவர்கள் தங்களைக் குறைவாகக் காத்துக்கொள்ளும் தருணங்களில் - மகா கவர்ச்சியைக் கொண்டுள்ளன" என்று கவனித்துள் ளார்.[39] மறைவான எண் சாஸ்திரம் என்பது எதிர்காலத்தைக் கூறும் ஒரு வழிமுறையாக, மூட நம்பிக்கையுள்ளவர்களால் பயன்படுத்தப்பட்டது (படுகிறது). இந்த நடைமுறையானது ஜாதகம் மற்றும் பிற குறிசொல்லும் நடைமுறைகளுடன் வகைப்படுத்தப் பட்டுள்ளது,[40] இவைகள் வேதாகமத்தில் கண்டனம்பண்ணப் பட்டுள்ளன (உபாகமம் 18:9-13; ஏசாயா 47:8-15). இந்தப் பகுதியில் முன்வைக்கப்பட்டுள்ள எளிய, நல்ல அடையாளத்துவம் என்பது மறைவான எண் சாஸ்திரக்காரர்களின் கட்டுப்பாடற்ற மற்றும் உத்தரவாதமற்ற முடிவுகளில் இருந்து தொலைவில் உள்ளது.

பவுலின் வார்த்தைகள் சிலவற்றைத் தழுவி, பின்வரும் அறிவுரையைக் கூறுவதற்கு என்னை அனுமதியுங்கள்: "(எண்களைப் பற்றிய) புத்தியீனமும் அயுக்தமுமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்குமென்று அறிந்து, அவைகளுக்கு விலகியிரு" (2 தீமோத்தேயு 2:23).

## முடிவுரை

அதிகமாய்ச் சுமத்தப்பட்ட தகவல்களினால் நீங்கள் நிலைதடுமாறத் தயாராக இருப்பீர்கள் என்றால், உற்சாகமூட்டுவதற்கான சில வார்த்தை களை உங்களுக்கு நான் துரிதமாய்த் தர அனுமதியுங்கள்:

(1) இந்தப் பாடத்திலும் இதற்கு அடுத்த பாடத்திலும் இருக்கும் எல்லா விபரங்களைக் குறித்தும் கவலைப்படாதீர்கள். எடுத்துரைக்கப்பட்ட பொதுவான கருத்துக்களை நீங்கள் புரிந்துகொண்டதாக நினைத்த பின்பு, ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் உள்ள கேள்விகளுக்குப் பதில் அளியுங்கள். நீங்கள் அவ்வாறு செய்கையில், பதில்களைப் பாடங்களின் வரிகளை அடிக்கோடிடுங்கள். அது நீங்கள் நினைவில் வைக்கத் தேவையான திறவுகோல் உண்மைகளை, வெளிப்படுத்தின விசேஷத்தின் வசனப் பகுதிக்கு நாம் செல்லுகையில் உங்களுக்கு உதவக்கூடிய தகவல்களை

முக்கியத்துவப்படுத்திக் காண்பிக்கும்.

*(2) பின்வரும் உண்மையைப் பற்றிக்கொண்டிருங்கள்: நீங்கள் வெளிப்படுத்தின விசேஷம் பற்றி அதிகமாய்ப் புரிந்துகொண்டாலும் அல்லது புரிந்து கொள்ளாவிட்டாலும், தேவனுடைய உதவியுடன் நீங்கள், நாம் கற்றுக்கொள்ளும்படிக்கு அவர் நோக்கம் கொண்டுள்ள அடிப்படை சத்தியங்களைக் கண்டறிய முடியும். இராபர்ட் மவுன்ஸ் அவர்கள் சுட்டிக்காண்பித்தபடி, "... இந்தப் புத்தகத்தின் முற்றான செய்திக்காக இதை வாசித்து, விபரங்களினால் மிகவும் அதிகமாகப் பிரமிப்பு அடையும்படி சோதிக்கப்படுதலை எதிர்த்து நிற்கின்ற யாவருக்கும் ... வெளிப்படுத்தின விசேஷத்தின் அடிப்படை சத்தியங்கள் கிடைக்கின்றன."[41]*

---

குறிப்புகள்

[1]"Here *be* dragons" *என்பது,* "Here *are* dragons" *என்று கூறுவதற்கான பழங்கால வழிமுறையாய் இருந்தது.* [2]*Sun என்பது* "soon" *என்று உச்சரிக்கப்படுகிறது.* [3]*இது "உடன் தூக்கி எறியப்படுதல்" என்று அர்த்தப்படுகிற* "parable" *என்ற வார்த்தையைப் போன்றதாகவே உள்ளது.* [4]*American Heritage Electronic Dictionary,* 3d ed. (1992), s.v. "symbol." [5]*நீங்கள் வாழும் இடத்தில் அர்த்தமாகக்கூடிய ஒரு விவரிப்பை இங்கு பதிலீடாகப் பயன்படுத்துங்கள்.* "Uncle Sam" *என்பது அமெரிக்காவிற்கான ஒரு அடையாளமாக உள்ளது, இது உலகின் பல பாகங்களில் புரிந்துணரப் படுகிறது.* [6]Earl F. Palmer, *1, 2, 3 John & Revelation*, The Communicator's Commentary Series, vol. 12 (Dallas: Word Publishing, 1982), 102. [7]Jim McGuiggan, *The Book of Revelation,* Looking Into the Bible Series (Lubbock, Tex.: International Biblical Resources, 1976), 15. [8]*இங்கே ஒரு பொது விதி உள்ளது: ஒரு வசனப்பகுதியானது சாத்தியக்கூறின்மை அல்லது பொருத்தமற்றதை உள்ளடக்கியிருந்தால் தவிர, அது ஒரு நேரெதிர்க்கருத்து அல்லது சீரற்றதன்மையை உள்ளடக்கியிருந்தால்தவிர, அது ஒழுக்கத்திற்கு ஒவ்வாத முடிவை உள்ளடக்கியிருந்தால்தவிர, அதன் சந்தர்ப்பப் பொருளானது உருவகப்பயன்பாட்டை வற்புறுத்தினால் ஒழிய, பேச்சு உருவகம் ஒன்று பயன்படுத்தப்பட்டுள்ளது என்று ஏவுதல் பெற்ற எழுத்தாளர் கூறியிருந்தால் ஒழிய, அல்லது உருவக மொழி நடை பயன்படுத்தப்பட்டுள்ளது என்று பொது அறிவுக்கூறு நமக்குக் கூறினால் தவிர, அது நேரடியாகவே அர்த்தம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.* [9]Ray Summers, *Worthy Is the Lamb* (Nashville: Broadman Press, 1951), 48. [10]*இருப்பினும் சிலவேளைகளில், மூல அடையாளத்தைப் புரிந்து கொள்வதைக்காட்டிலும் "விளக்கத்தைப்" புரிந்து கொள்ளுதல் என்பது கடினமானதாக, மிகக்கடினமானதாக உள்ளது (13:18; 17:9, 10).*

[11]*இந்தப் புத்தகத்தில் உள்ள "ஆண்டவரே, எதுவரைக்கும்?" என்ற பாடத்தில், 1:4, 5க்கான குறிப்புகளைக் காணவும்.* [12]William Hendriksen, *More Than Conquerors* (Grand Rapids, Mich.: Baker Book House, 1954), 58. [13]*கர்த்தருடைய சபையானது - துன்புறுத்தப்படுதலை எதிர்நோக்கும் வேளையிலும்கூட - தனது வெளிச்சத்தை மறைத்து வைக்கக்கூடாது என்பது சாத்தியக்கூறான ஒரு நடைமுறைப் பயன்பாடாக உள்ளது.* [14]Summers, 50. [15]"Float" *என்பது நகருகின்ற ஒரு நடைமேடையின்மீது உயர்த்தப்பட்டு ஒரு அணிவகுப்பில் இழுத்துவரப்படுகிற அல்லது ஓட்டிவரப்படுகிற அலங்கரிக்கப்பட்ட காட்சியாக உள்ளது.* [16]*நான்*

அவ்வப்போது, ஒரு பாடத்தில் - விசேஷமாக, தொடக்கப் பாடங்களில் - உங்கள் சிந்தையில் இந்த வடிவமைப்பை நிலைநாட்டு வதற்காக இந்த மூன்று படிநிலைகளின் ஊடாகவும் செல்லுவேன். [17]பாடக்கருத்துக்களுக்கு வழிவகை பெற்றிருக்கக்கூடிய இடத்தில் நீங்கள் வாழ்ந்தால், வசனத்திற்கு முறையாக அர்த்தம் கூறுதல் பற்றிய அடிப்படைப் படிப்பு ஒன்று பயனுள்ளதாயிருக்கும். An old classic is *Hermeneutics* by D. R. Dungan (N.p.; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.). [18]Hugo McCord, *The Royal Route of Revelation* (Nashville: 20th Century Christian, 1976), 8. [19]Summers, 21. [20]உயரமாக உள்ள சில கட்டிடங்களில் "பதிமூன்றாம் தளம்" என்று பெயரிடப்பட்ட தளம் இருப்பதில்லை. இதற்கு மாறாக அவர்கள் "பன்னிரண்டாம் தளம்" என்பதில் இருந்து "பதினான்காம் தளம்" என்பதற்குக் கடந்து செல்லுகின்றனர். கடைசி இராப்போஜனத்தின்போது, யூதாஸ் பதிமூன்றாம் விருந்தாளியாக இருந்தான் என்பது, ''பதிமூன்று'' என்ற எண் துரதிர்ஷ்டவசமானதாகக் கருதப்பட வந்தது எப்படி என்பதைப் பற்றிய கோட்பாடாக உள்ளது.

[21]Measles (சின்னம்மை) என்பது முகத்தையும் உடலையும் சிவப்புக் கொப்புளங்களால் மூடுகிற குழந்தைப் பருவத்து வியாதியாக உள்ளது. [22]"திரித்துவம்" ["Trinity"] என்பது "ஒன்றில் மூன்று" என்று அர்த்தப்படுகிற இலத்தீன் வார்த்தையாக உள்ளது. இது வேதாகமத்தில் காணப்படுவதில்லை, ஆனாலும் இது வேதாகமக் கருத்து ஒன்றைக் கொடுக்கிறது. [23]Homer Hailey, *Revelation*: *An Introduction and Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1979), 43. [24]Summers, 22. [25]வெளிப்படுத்தின விசேஷத்தில், ஏழு விஷயங்கள் பற்றிய பட்டியலானது அடிக்கடி, மூன்று கொண்ட ஒரு குழுவும் அத்துடன் கூடுதலாக நான்கு கொண்ட குழு ஒன்றும் (அல்லது இதற்கு நேரெதிரானதாகவும்) கொண்டுள்ளதாகப் பட்டியல் இடப்படுகிறது. [26]''ஏழு'' என்பது வேதவசனம் முழுவதிலும் காணப்படுகிற எண்ணாக உள்ளது (படைப்பின் ஏழு நாட்கள் என்பதிலிருந்து இது தொடங்குகிறது). [27]Summers, 23. [28]இது ஒருவேளை, தசம எண் முறையின் முன் கூற்றுப்பகுதியாக இருந்தது. ''பத்து'' என்ற எண்ணுக்கான வேதாகமப் பயன்பாட்டிற்கு, பத்துக் கட்டளைகள் என்பது நன்கு பழக்கமான ஒரு உதாரணமாக உள்ளது. [29]முழுமையான ஒரு கனசதுரம் (எல்லாப் பக்கங்களும் சமமான அளவுடையது) என்பது பூரணத்துவத்திற்கு இன்னொரு அடையாளமாக இருந்தது (21:16ஐக் காணவும்). இவ்வாறு, "பத்தின்" மும்மடி (10 x 10 x 10 அல்லது 1,000) என்பது குறிப்பாக, முழுமைத்தன்மை அல்லது பூரணத்துவத்தின் பலத்த அடையாளமாக இருந்தது. [30]ஏழுடன் தொடர்பு கொண்டதாகவும் இந்தப் பட்டியலில் காணப் படாததாகவும், பின்னால் தரப்பட்டதாகவும் உள்ளது, 17:11ல் பயன் படுத்தப்பட்டுள்ள ''எட்டாவது'' என்ற வரிசை எண்ணாகும். வசனப்பகுதியானது, "எட்டாவதானவனும், அவ்வேழிலிருந்து தோன்றுகிறவனும்" என்று - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், இது மிருகத்தின் ஏழு தலைகளுடன் ஒரு பகுதியாக ஏதோ ஒரு வகையில் உள்ளடக்கப்பட்டிருந்தது என்று - கூறுவதால், இந்த எண்ணைப் பட்டியலில் உள்ளடக்கவில்லை. ஆகையால், ''எட்டாவது'' என்பது அவ்வசனப்பகுதியில் "ஏழு" என்ற எண் கொண்டுள்ள எந்த அர்த்தத்தில் இருந்தும் தனித்த நிலையில் அடையாளத்துவத் தனிச்சிறப்பு எதுவும் அற்றதாகக் காணப்படுகிறது.

[31]அந்த நாட்களில் இருந்த யூதர்களில் பலருக்கு "ஆறு" என்ற எண்ணானது, இன்றைய நாட்களில் பலருக்கு "பதிமூன்று'' என்ற எண் கொண்டுள்ள அதே அர்த்தத்தைக் கொண்டிருந்தது. (அதிகாரம் 4 மற்றும் 5ல் ஆறு சிறகுகளைக் கொண்டிருந்த ஜீவன்கள் இவ்விடத்தில் அறைகூவல் ஒன்றை முன்நிறுத்துகிறது.

இவைகள் அனேகமாக இறகுகளின் மூன்று ஜோடிகள் என்று நினைக்கப்பட்டிருக்க வேண்டும்.) [32]"காலங்கள்" என்ற சொற்றொடர், இருமுறை என்ற குறைந்த அளவுக்கான பன்மை எண்ணைக் குறிக்கிறது என்பது தெளிவு. [33]இன்றைக்கான சத்தியம் வெளியீடுகளுக்குத் தயாரிக்கப்படுகிற விளக்கவுரைப் பாடக்கருத்துக்களில் NASB வேதாகமத்தைப் பயன்படுத்துதல் என்பது நமது நடைமுறையாக உள்ளது - மற்றும் அதுவே வெளிப்படுத்தின விசேஷம் பற்றிய நமது படிப்பிலும் விஷயமாக இருக்கும். NASB வேதாகமம், பழங்கால எடைகள் மற்றும் அளவுகளை நவீனத்துவப் படுத்தியுள்ளது. வேதாகமத்தின் பெரும்பாலான புத்தகங்களில், அது உதவி நிறைந்ததாக இருக்கிறது, ஆனால் வெளிப்படுத்தின விசேஷத்தில், இந்த நடைமுறையானது சிலவசனங்களில் உள்ள எண்ணியல் அடையாளத்துவத்தை அழித்துவிடுகிறது. எடுத்துக்காட்டாக, NASB யில், பரிசுத்த நகரம் 1,500 மைல்கள் அகலம், நீளம் மற்றும் உயரம் கொண்டது என்று கூறப்படுகிறது (21:16) - பட்டியலில் நீங்கள் 1,500 என்ற எண்ணைக் காண இயலாது. KJV, NKJV, ASV, RSV மற்றும் பிற மொழிபெயர்ப்புகளில், இந்த அளவையை நீங்கள் உண்மையில் 12,000 பர்லாங் (நேரடி அர்த்தத்தில், ஸ்தாதிகள்) என்றிருக்கக் காண்பீர்கள் - நமது பட்டியலில் 12,000 என்ற எண் உள்ளது. [34]$^{1}/_{3}$ என்பது, எந்த ஒன்றையும் மூன்று பாகமாகப் பிரித்தல் என்பது அதைப் பலவீனப்படுத்தும் என்ற இன்னொரு கருத்தையும் கொண்டுள்ளது. [35]McGuiggan, 163. நாம் கடனுக்கு வாங்கும்போது, "பத்தில் ஒன்றை," "நான்கில் ஒன்றை," அல்லது "மூன்றில் ஒன்றை" முதலில் கொடுத்து விடும்படி கேட்டுக்கொள்ளப் படுதல் என்பது சாதாரணமானதாக உள்ளது. [36]Bruce M. Metzger, *Breaking the Code: Understanding the Book of Revelation* (Nashville: Abingdon Press, 1993), 11. [37]"எண் சாஸ்திரம்" ("numerology") என்பது "எண்களைப் பற்றிய படிப்பு" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது, ஆகையால் இது தன்னி லேயே ஒரு மோசமான வார்த்தையாக இருப்பதில்லை. இருப்பினும், இது பெரும்பாலானவர்களின் சிந்தைகளில் எண்களை சாஸ்திரரீதியாகப் பயன்படுத்துதல் என்று அடையாளப்படுத்தப்படுவதால், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் உள்ள எண்களின் அடையாளத்துவப் பயன் பாட்டைக் குறிப்பிடுகையில் இந்தச் சொற்றொடரைத் தவிர்த்து விடுதல் மிகச் சிறந்ததாக இருக்கலாம். [38]*American Heritage Electronic Dictionary*, 3d ed. (1992), s.v. "numerology." வேதாகமம் முழுவதிலும் பயன்படுத்தப்பட்டுள்ள எண்களின் இரகசிய அல்லது சாஸ்திரரீதியான அர்த்தத்தைக் கண்டறியும் முயற்சிகளின் கலந்துரையாடலைப் பின்வரும் தொகுதிகளில் காண முடியும்: Earl F. Palmer, *1, 2, 3 John & Revelation,* The Communicator's Commentary Series, vol. 12 (Dallas: Word Publishing, 1982), 108-9, and John J. Davis, *Biblical Numerology* (Grand Rapids, Mich.: Baker Book House, 1968), 125-49. நீண்ட கலந்துரையாடல் ஒன்றின் முடிவில், டேவிஸ் அவர்கள், "வேதாகம எண்ணியலின் பரிந்துரையாளர்களால் முன்மொழியப்பட்ட உரிமைகோருதல்கள் மற்றும் முறைமைகளைக் கவனமாய் பகுப்பாய்வு செய்தபின்பு, இந்த முழுமுறைமையும் மூலத்தில் கூறப்படாத பொருள் கொண்ட மதிப்பற்ற முறை என்ற வகையில் புறக்கணிக்கப்பட வேண்டும் என்பதே நமது முடிவாக உள்ளது" என்று கூறினார் (பக்கம் 148). [39]J. B. Segal, "Numerals in the Old Testament," *Journal of Semitic Studies* (Spring 1965), 10:2. [40]*Grolier Multimedia Encyclopedia* (1995), s.v. "Fortune-telling," by Benjamin Walker.

[41]Robert Mounce, notes on the Book of Revelation, *The NIV Study Bible*, gen. ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 1924.

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. வெளிப்படுத்தின விசேஷத்தின் அடையாளங்கள் உங்களைப் பயமுறுத்துகின்றனவா?
2. வெளிப்படுத்தின விசேஷத்தின் அடிப்படைச் செய்தியை அறிவதற்கு அதில் உள்ள ஒவ்வொரு விஷயத்தையும் புரிந்துகொள்வது அவசியமாக உள்ளதா?
3. "அடையாளம்" என்ற வார்த்தை எதனை அர்த்தப்படுத்துகிறது? இந்தப் பாடத்தில் தரப்பட்டுள்ளவை தவிர, அடையாளங்களுக்கான மற்ற உதாரணங்கள் எதையாவது உங்களால் நினைக்கஇயலுமா?
4. இந்தப் பாடத்தின்படி, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தைப் புரிந்துகொள்வதற்கு மிக முக்கியமான கொள்கையாக இருப்பது எது?
5. உருவக மொழிநடையை விளக்கப்படுத்துவதற்குத் தரப்பட இரண்டு விசேஷித்த கொள்கைகள் யாவை? அவற்றைப் பற்றிக் கலந்துரையாடவும்.
6. ஒரு தரிசனத்தில் உள்ள ஒவ்வொரு விஷயமும் தனிச்சிறப்பு வாய்ந்ததாக உள்ளதா? விபரங்கள் பலவற்றின் நோக்கம் என்ன?
7. வேதாகம விளக்கத்திற்கென்று இந்தப் பாடத்தில் தரப்பட்ட மூன்று பொதுவான கொள்கைகள் யாவை? அவற்றைப் பற்றிக் கலந்துரையாடவும்.
8. குறிப்பிட்ட ஒரு அடையாளத்தின் அர்த்தம் பற்றி நிச்சயித்துக் கொள்ளுதல் இயலாததாக இருக்கும்போது, நாம் என்ன செய்ய வேண்டும்?
9. வெளிப்படுத்தின விசேஷத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ள அடையாளங்களின் நான்கு வகைகள் யாவை?
10. வேதாகமம் எழுதப்பட்ட காலங்களில், எண்கள் என்பவை எப்போதுமே அவைகளின் நேரடி அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டனவா?
11. இந்தப் பாடத்தின்படி, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் உள்ள பெரும்பாலான எண்கள் எந்த மூன்று எண்களில் இருந்து தரவழைக் கப்பட்டுள்ளன?
12. முழுமைத்துவத் தன்மையைக் குறிப்பிடுவதாகக் கூறப்படும் அடிப்படை எண்கள் யாவை?
13. இந்தப் பாடத்தில் "666" அடையாளத்துவத் தனிச்சிறப்பாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது என்ன?
14. "1,000" என்பதின் அடையாளத்துவத் தனிச்சிறப்பு என்ன?
15. "144,000" என்பதில் காணக்கூடிய அடையாளத்துவத் தனிச்சிறப்பு என்ன?

## வெளிப்படுத்தின விசேஷத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள அடையாளத்துவ எண்கள்

*1 = ஒருமை அலகு (ஒன்றே ஒன்று)*
*2 (1 + 1) = பலப்படுத்தப்பட்டது*
*3 = தெய்வீகத்துவ எண்*
*$3^1/_2$ (7ல் பாதி) = முழுமையின்மை (42 மாதங்கள்; 1,260 நாட்கள்; "ஒரு காலமும், காலங்களும் அரைக்காலமும்" = $3^1/_2$ ஆண்டுகள் காலத்திற்கு சோதனை, எதிர்காலத்திற்கான நம்பிக்கை மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது)*
*4 = படைப்பின் எண் (வானவியலின் எண், மனிதத்துவம்)*
*5 (10ல் பாதி) = மட்டுப்படுத்தப்பட்ட பலம்*
*6 (7 - 1) = பூரணத்துவம் இன்மை (துன்மார்க்கம், வஞ்சனை, முடிவில் தோல்வி)*
*7 (3 + 4) = பூரணத்துவம் (பரிசுத்தமான முழுமைத்தன்மை)*
*10 = மனிதத்துவ முழுமைத் தன்மை (நிறைவான தன்மை அல்லது அதிகாரம்)*
*12 (3 x 4) = மதரீதியான முழுமைத் தன்மை*
*24 (2 x 12) = மதரீதியான முழுமைத் தன்மை வலிவூட்டப் படுதல்*
*40 (4 x 10) = மனிதத் தரப்பில் முழுமைத்தன்மை*
*42 ($3^1/_2$ யில் காணவும்)*
*144 (12 x 12) = மதரீதியான முழுமைத் தன்மையின் முழுமைத்தன்மை*
*666 (6ல் காணவும்) = பூரணத்துவம் இன்மை, துன்மார்க்கம், வஞ்சனை, மற்றும் தோல்வி வலிவு ஊட்டப்படுதல்*
*1,000 (10 x 10 x 10) = முழுமைத்துவத்தின் முழுமைத்துவத்தின் முழுமைத்துவம்*
*1,260 ($3^1/_2$ யில் காணவும்)*
*1,600 (4 x 4 x 10 x 10) = மனிதத்தரப்பில் மொத்தத் தன்மை*
*7,000 (7 x 1,000) = முழுமைத்தன்மை வலிவூட்டப்படுதல்*
*12,000 (12 x 1,000) = முழுமைத்தன்மை வலிவூட்டப்படுதல்*
*144,000 (144 x 1,000) = முழுமைத்தன்மை வலிவூட்டப்படுதல்*
*200,000,000 (2 x பல 10கள்) = அளவிடமுடியாத பலம்*
*1,000,000,000 மற்றும் அதிகமானது = எண்ண இயலாதது, மனிதப்புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டது*